## தோட்டி மக்களின் சமுதாயநிலை

### முன்னுரை:

தகழி சிவசங்கர பிள்ளை இயற்றிய **“தோட்டியின் மகன்”** என்னும் மலையாள நாவலை (1946ம் ஆண்டு) **சுந்தர ராமசாமி** என்பவர் 1951,52 ஆம் ஆண்டில் மொழிபெயர்த்தார். இந்நூல் ஆகஸ்ட் 2000இல் முதன் முதலில் பதிபிக்கப்பட்டது. “தோட்டியின்மகன்” என்னும் இந்நாவலில் தோட்டி சமூகத்தை சார்ந்த மக்கள் எதிர்கொள்ளக்கூடிய பொருளாதாரம், கல்வி, சமூக ஏற்றத்தாழ்வு, சாதிய சிக்கல்களை மையமாக வைத்து படைக்கப்பட்டுள்ளது. இதனை ஆய்வு செய்வதே திட்டக் கட்டுரையின் நோக்கமாகும்.

### ஆசிரியர் வரலாறு:

சுந்தர ராமசாமி கன்னியாகுமரி மாவட்டம் 1931மே திங்கள் 5ஆம் நாள் ‘மகாதேவர்’ என்னும் கிராமத்தில் சுந்தரம் அய்யர்-தங்கம்மாளுக்கு இணையாக 3ஆம் பிள்ளையாக பிறந்தவர். சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, திறனாய்வு எனப் பன்முகம் இவருக்கு உண்டு. **‘பசுவய்யா’** என்னும் புனைப்பெயரில் கவிதைகள் வடித்தார். மேலும் இவர் மொழிபெயர்ப்பாளராகவும், விமர்சகராகவும், மதிப்புரையாளராகவும் விளங்குகிறார். இவர் தகழியின் **‘செம்மீன்’** நாவலையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவர் அக்டோபர் 15, 2000 அன்று மறைந்தார்.

### மொழிபெயரப்பின் தோற்றமும் வளர்ச்சியும்:

மொழியின் வழியே சிந்தித்து வினையாற்றிக் கொண்டிருக்கும் மனிதச் செயல்பாட்டில் ‘மொழிபெயர்ப்பு’ முக்கிய இடம் வகிக்கிறது. ஒவ்வொருவரும் தான் வாழும் ஒட்டுமொத்த சமூகத்துடனும் பிற சமூகங்களுக்கிடையிலும் இயைந்து வாழ்ந்திடுவதற்கான தொடர்புகளை ஏற்படுத்திட மொழிபெயர்ப்பு உதவுகிறது. இத்தகைய மொழிபெயர்ப்பு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய போது இருந்த நிலைமையும் அதற்குப் பின்னர் உலகமெங்கும் நடைபெற்ற மொழிபெயர்ப்பு முயற்சிகளின் பல்வேறு படிநிலைகளும் பலதரப்பட்டனவாகும். நல்ல மொழிபெயர்ப்பு எப்படி இருக்க வேண்டுமென்று வரையறுத்திட மொழியியலாளரும் மொழிபெயர்ப்பாளர்களும் தொடர்ந்து முயன்று கொண்டிருக்கின்றனர்.

### மொழிபெயர்ப்பு நாவல்:

புதுமை என்ற பொருள் கொண்ட சொல்லில் பிறந்த இவ்விலக்கியத்தை தமிழில் **‘புதினம்’** என குறிப்பிடுதல்

பொருத்தமானதாகும். புதினம் அல்லது நாவல் என்பது மக்களால் பரவலாக விரும்பப்படும் ஒரு இலக்கிய வடிவம் ஆகும். இதில் வாழ்கையும், நிகழ்வுகளும் கற்பனையாக உரைநடையில் எழுதப்படுகின்றன. ஆங்கிலேயர் ஆட்சியால் ஏற்பட்ட சமூக, அரசியல் மாற்றங்களே மக்களிடையே நிலவிய வேறுபாடுகளைக் களைந்தது. மக்கள் வாழ்விலும், கலை இலக்கிய உலகிலும் மறுமலர்சிக்கு வித்திட்டன. இதுவே உரைநடை வடிவில் நாவல் தோன்றக் காரணம் ஆயிற்று.

சிறந்த பிறமொழி நாவல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதை **'மொழிப்பெயர்ப்பு நாவல்'** என அழைத்தனர். அதில் சில மொழிபெயர்ப்பு கண்டேகரின் மராட்டிய நாவலை கா. ஶ்ரீஶ்ரீ அவர்கள் மொழி பெயர்த்தார், ஒரியா மொழிக் கதைகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்காக தமிழ்நாடன் சாகித்ய அகடாமி விருது பெற்றுள்ளார்.

**"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**

**தமிழ் மொழியில் பெயர்த்திட வேண்டும்"**

-என்ற பாரதியாரின் கவிதை வரிகள் மொழிபெயர்ப்பின் அவசியம் குறித்து நாம் அறிந்து கொள்ள உதவுகின்றது.

**தோட்டியின் மகன் நாவல் அறிமுகம்**:

கதைகளம் கேரள மாநிலம் ஆலப்புழா பகுதியை மையமிட்டதாக அமைந்துள்ளது. இது சமூகத்தில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்திய நாவல். பெரும்பாலான நாவல்கள் சமூக பிரச்சனைகளை மையமாக வைத்து எழுதப்பட்டிருந்தாலும், சேரியில் வாழும் மக்களின் குறிப்பாக மலம் அள்ளக் கூடிய மக்களை சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட வாழ்க்கை நிலையை பதிவு செய்வதாக இந்நாவல் அமைந்துள்ளது. இந்நாவலில் இல்லாத உணர்வே இல்லை என்று சொல்லலாம். அன்பு, வெறுப்பு, கோபம், தாபம், காதல், பாசம், வேஷம், துன்பம், வஞ்சம், கொடுமை, இறப்பு, பட்டினி, நோய் இன்னும் பலவற்றை அடக்கியுள்ளது.

**மையக்கருத்து:**

தோட்டி சமூகத்தை சார்ந்த மக்கள் எதிர்கொள்ளக்கூடிய சிக்கல்களை மையமாக வைத்து படைக்கப்பட்டுள்ளது. ஒரு தோட்டியின் மகன் தன் மகனும் தொட்டியாகவே இருந்து விடுவானோ என அஞ்சுகிறான்.மகனுக்காக பாடுபடும் தந்தையின் முயற்சிகளும் அதன் பலா பலன்களும். இதற்காக அவன் காணும் கனவுகள் ஏராளம், செய்யும் முயற்சிகளும் தாராளம். ஒரு தந்தை தான் என்ன ஆனாலும் சரி, தன் மகன் பெரிய ஆளாக வர வேண்டும், எந்த சிரமும் அவனுக்கு

வரக்கூடாது. படித்து புகழ்பெற வேண்டும் என விரும்புகிறான். இதற்காக சுடலைமுத்து போடும் திட்டங்கள், அவனை அவனே நிர்பந்தத்துடன் மாற்றி கொள்ளும் வாழ்க்கை முறை, சேர்த்து வைக்கும் பணம் அனைத்தும் பிரமிக்க வைப்பதாக அமைகிறது. ஏனெனில் சாதாரண தோட்டி இதை எதையும் செய்ய மாட்டன். அவன் மகன் மோகன் கொடுத்து வைத்தவன்தான். சாதாரண மனிதர்களைபோல சமூகத்தில் குடும்பம், குழந்தைகள் என கௌரவத்தோடு வாழ வேண்டும் என்று சுடலை விரும்புகிறான். அதற்காக அவன் எடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்த போதிலும், அம்முயற்சி சமூக மாற்றத்திற்கு அடிக்கல்லாய் அமைந்தது.

**கதைசுருக்கம்:**

முப்பது ஆண்டுகளாக தோட்டியாக பணிபுரியும் **இசக்கிமுத்து**விற்கு **சுடலைமுத்து** என்ற மகன் இருந்தான். இசக்கிமுத்து தன் மனைவி தன்னிடம் தன் மகனை விட்டுச் சென்றதை போன்றுதான் தன் மகனுக்கு வாளியையும், மண்வெட்டியையும் விட்டுவிட்டு ஆறடி நிலம்கூட கிடைக்காமல் மோசமான நிலையில் இறந்து போனார். வேறு வழியின்றி சிறிதும் விருப்பம் இல்லாமல் தன் தந்தையின் பணியைத் தொடர்ந்து செய்தான் சுடலைமுத்து. ஆனால் அவன் மற்ற தோட்டிகளைப் போன்று அல்லாமல் சுத்தமாகவும், வேலை செய்யும் இடத்தில் உள்ள முதலாளிகளை பார்த்து அவர்களைப் போன்று நடக்கவும் கற்றுக்கொண்டான். சுடலை சக தோட்டிகள் அனைவரையும் ஒன்று சேர வேண்டும் என விரும்புகிறான். ஆனால் அவன் ஒரு சிறந்த தலைவனா? என்றால் கிடையாது. ஒரு சூழ்நிலையில் சுடலை தன் முதலாளிகளுடன் சேர்ந்தான். சேர்ந்த பின்பு அவன் தன் மக்களை கண்டுகொள்ளவில்லை. முதலாளிகளுடன் சேர்ந்த பிறகு சுடலையின் வாழ்க்கைமுறை மாறியது. அப்போது **வள்ளி** என்ற சாதாரண பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டான். திருமணமான ஆரம்பத்தில் வள்ளிக்கு சுடலையின் மனநிலை அறியாமல் போனது. காலபோக்கில் தன் கணவன் செய்வது தவறு என்றும் அதை அவனே அறியாமல் இருக்கிறான் என்பதையும் அவள் தெரிந்து கொண்டாள். அந்நிலையில் கடற்கரையில் இருந்து வைசூரி என்னும் நோய் ஊருக்குள் பரவியது. அந்நோய் தோட்டிகளிடையே வேகமாக பரவியது. அதில் சுடலைமுத்துவின் நண்பரான **சுந்தரத்தின்** மனைவி அம்முவை தாக்கியது. அவள் இறந்து போகும் நிலையில் கிடக்கிறாள். சுடலைமுத்து அதை சிறிதும் பொருட்படுத்தாமல் நடந்து கொள்கிறான். பின் அவளும் இறந்து விடுகிறாள். அவன் அவனின் பிள்ளைகளோடு அனாதை ஆகிறான். மேலும் திருநெல்வேலியில் இருந்து புதுத்தோட்டிகள் வருகிறார்கள். அவர்கள் சுடலையைப் பற்றி அறிந்து கொண்டு **பிச்சாண்டி**யை தலைவனாக

தேர்ந்தெடுக்கிறார்கள். சுடலையை ஒதுக்குகிறார்கள். பிச்சாண்டி முதலாளிக்கு ஆபத்தாக இருப்தால், முதலாளிகள் பிச்சாண்டியை ஊரை விட்டு விரட்டி விடும்படி சுடலையிடம் சொல்கிறார்கள். சுடலையும் பிச்சாண்டியின் மீது பொய் சுமத்தி ஊரை விட்டு விரட்டி அவனுக்கு துரோகம் செய்து விடுகிறான். பிச்சாண்டியின் குடும்பம் காணாமல் போனது. அதன்பிறகு சுடலை எப்பொழுதும் போல் வாழ்க்கையை வாழ ஆரம்பித்தான். அச்சமயத்தில் வள்ளி கருவுற்று, **மோகன்** என்னும் ஆண் குழந்தையை பெற்றெடுத்தாள். சுடலையும் வள்ளியும் தங்களது உலகமாக மோகனை எண்ணினார்கள். சுடலை தன் மகன் ஒரு தோட்டியாகிவிட கூடாது என்பதற்காக தந்தை சுடலை பிள்ளையை பாசம் காட்டாமலேயே வளர்த்தினான். இதில் வெளியேசென்றுவிட்டு வள்ளிக்கு உடன்பாடு இல்லை. பின்பு அந்த ஊரிலும் மோகனுக்கு நண்பர்கள் என யாரும் இல்லை. ஒருவனைதவிர, அவன் பிச்சாண்டியின் மகனே ஆவான். மோகன் தன் வீட்டிற்க்கு தெரியாமல் அவனுடன் நட்பு கொண்டு வந்தான். ஒருநாள் மோகன் வீட்டிற்கு தெரியாமல் வெளியே சென்றுவிட்டு திரும்பும்போது வீட்டில் தன்அம்மா வள்ளி காலரா நோயினால் இறந்து கிடந்தாள். தந்தையும் காலராவினால் பாதிக்கப்பட்டு இறந்து கிடந்தான். சுடலை என்னவாக ஆக கூடாது என்று நினைத்தானோ அதுவாகவே ஆனான். மோகன் ஒரு நல்ல தலைவனாக இருந்தான். மோகன் ஒரு நல்ல தலைவனாக இருந்தான். மோகன் தான் செய்யும் தோட்டி தொழிலில் சுடலையைப் போன்று அறுவறுப்பு இன்றி இருந்தான். இறுதியாக தோட்டிகளின் உரிமைக்கான போராட்டத்தில் மோகன் இறந்து விட்டான்.

### பாத்திரப் படைப்பு:

ஒரு கதையில் அமையும் பாத்திரம் மிக முக்கியமான ஒன்றாகும். ஒரு கதையை வாசிப்பவருக்கு அக்கதையை முழுமையாக உணர்ந்து கொள்ள, கதையில் அமையும் பாத்திரங்களே உதவி செய்கிறது. அவ்வகையில் ஒரு கதையில் அமையும் பாத்திரங்கள்:

முதன்மை கதாபாத்திரங்கள்

துணை கதாபாத்திரங்கள்

என இரண்டு வகைகளில் கூறப்படுகிறது.

### முதன்மை கதாபாத்திரங்கள்:

நாவல் என்ற படைப்பிலக்கியத்திற்கு பாத்திர படைப்பு முக்கிய அங்கம் வகிக்கிறது. அந்த வகையில் கதை முழுவதிலும் ஊடுருவிச் செல்லும் பாத்திரங்களே முதன்மை பாத்திரங்கள் ஆகும். இவ்வாறாக வரும் முதன்மை பாத்திரத்தின் மூலம் சமுதாயத்தில் ஒருவிதத் தாக்கம் ஏற்படுவதால் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

**துணைக் கதாபாத்திரங்கள்:**

முதன்மை கதாபாத்திரங்களின் செயல்களுக்கு ஏற்ப பெரிதும் துணை நிற்பவை துணைக் கதாபாத்திரங்கள் ஆகும். மனித இனத்தின் பல்வேறு பண்புகளை வெளிப்படுத்தும் வல்லமை துணைக் கதாபாத்திரங்களுக்கே உரியது.

**முதன்மை கதாபாத்திரங்கள்:**

சுடலைமுத்து,

வள்ளி,

மோகன்,

ஓவர்சீயர்கேசவபிள்ளை.

**துணைக் கதாபாத்திரங்கள்:**

இசக்கிமுத்து,

நகரசபை தலைவர்,

நீதிபதி,

ரெட்டி,

பேச்சாளர்,

வக்கீல் குமாஸ்தா,

ஓட்டல் வேலையாள்,

வக்கீல் முதலியார்,

வக்கீல் முதலியாரின் பேத்தி,

சன்னியாசி.

(தோட்டிகள்)

பிச்சாண்டி,

பிச்சாண்டியின் மனைவி,

வள்ளியின் அத்தை,

பழனி,

வடிவேலு,

சுப்பு,

ஔசேப்பு,

சிவனாண்டி,

கேளு,

பப்பு,

முனுசாமி,

பழனி ஆண்டவன்.

(கடைக்காரர்கள்)

டீ கடைக்காரன் மம்மு,

வெற்றிலை கடைக்காரன்.

**முதன்மை கதாபாத்திரங்கள்:**

**சுடலை**

சுடலை என்பவன் தோட்டியின் மகன்.

தொட்டிகளையும் விரும்பாதவன்.

மற்ற தோட்டிகளிடம் இருந்து மாறுபட்டவன்.

பெரிய கனவுகளை உடையவன்.

பீப்பாய் வண்டிக்கு பின்னால் வைத்துகக்கொண்டு வரப்பட்ட கஞ்சியும் சோறும் உண்டு சுடலை வளர்ந்த போதிலும் 'அழுக்கை அப்புறப்படுத்தும் தோட்டி, அழுக்கைதான் என்றும் தின்ன வேண்டும் போலிருக்கிறதே' என்று வினவியவன்.

சமுதாயத்தில் வளமையும், வறுமையும், ஏற்றத்தாழ்வும் இருத்தல் ஆகாது. மேலும் வறுமையின் பிடியில் சிக்கி பசியும் நோயும் கொண்டு அதனால் இறத்தல் இருத்தல் ஆகாது. மேலும் ஒருசாரார் வளமுடனும் மற்றொருசாரார் பிச்சை எடுத்து உண்ணும் நிலையும் இச்சமூகத்தில் உள்ளது அது மாற வேண்டும் என்று வள்ளுவர் சாடுகிறார். இதற்கு காரணம் இறைவனும் விதியும் என்றால் இறைவன் எதற்கு என்று சாபமிடுகிறார்.

**இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**

**கெடுக உலகியற்றி யான்.**

**(குறள்: 1062)**

இக்குறள் நமக்கு உணர்த்தும் உண்மை சமூகத்தில் எல்லோரும் எல்லாமும் பெற்று சமமாக வாழும் உரிமை உள்ளது என்பது.

பொருளாதார ஏற்றத்தாழ்வு, அதனால் ஏற்படும் வறுமை, அதன் விளைவாக இரத்தல் ஆகியவை கொடுமை. அவையற்ற சமுதாயமே மனிதனை உயர்த்த முடியும் என்ற கருத்தை உணர்த்துகிறது. இக்கருத்தை வலியுறுத்துவதைப்போல இந்நாவலில் இச்சுடலை பாத்திரத்தின் மூலமாக உணர்த்தப்படுகிறது.

தன்னுடைய தோட்டியாகிவிடக் கூடாது என்பதற்காக மிகவும் பாடுபட்டவன்.

தன்னுடைய சம மக்கள் மீது அக்கறை உள்ளவன். ஆனால் அவர்கள் தன்னுடைய கனவிற்கு உதவமாட்டார்கள் அல்லது புரிந்துகொள்ள மாட்டார்கள் என்பதால் அவர்களுக்கே துரோகம் செய்தவன்.

சுடலை தன் தந்தை இறந்த பின்பு சகோதரன் போன்று நம்பிக்கை அளித்த, துணைநின்ற பிச்சாண்டிக்கே துரோகம் செய்யத் துணிந்தவன்.

மாற்றான் மனைவி வைசூரியால் பாதிக்கப்பட்டபோது, தன் குடும்பத்திற்காக அவள் இறப்பாள் என்று தெரிந்தும் அவளை மருத்தவமனைக்கு அனுப்பியவன்.

தன்னுடைய கூட்டத்தினரிடம் மட்டும் செல்வாக்கு மிகுந்த பயத்தை வெளிக்காட்டிக் கொள்ளாத மனிதன்; எஜமானர்களிடம் ஏமாளி.

தன்னுடைய சகாக்களை ஏய்த்து சம்பாதித்தனவற்றை நகரசபை தலைவரிடம் கொடுத்து வைக்க சொன்ன கோமாளி.

தன் மகனுக்கு சிறந்த தந்தை. தன் மகன் தோட்டியாகிவிடக் கூடாது என்று வயிற்றில் நெருப்பை கட்டிக்கொண்டு அலைந்தவன்.

மகனை அள்ளிக்கொள்ள ஏங்கினான். அவனுடைய நாற்றம் மகனுக்கு ஒட்டிக்கொள்ளும் என்று விலகினான். ஆசை இருந்தும் மகனை கொஞ்ச முடியாமல் தன்னை கட்டுபடுத்திக் கொண்டு நின்றவன்.

சுடலை தனது கனவுகளின் உருவமாக மகனை பார்த்தான். சுடலை தன் விருப்பபடி மகனை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி படிக்க வைத்தான். கல்வி என்பது அனைவருக்கும் அவசியம் என்ற கருத்தை இந்த பாத்திரத்தின் வாயிலாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**பயிற்று பல கல்வி தந்து இந்த**

**பாரினை உயர்த்திட வேண்டும்.**

-என்ற பாரதியாரின் கவிதை மூலம் கல்வியின் இன்றியமையாமையை குறித்து நம்மால் அறிய முடிகிறது.

சுடலை தன் மகன் மீது தன்னுடைய நிழல் மட்டுமன்றி, வேறு எந்த தோட்டியின் நிழலும் விழாமல் பார்த்துக் கொண்டான்.

தன் உயிர் போகும் தருவாயிலும் மகன் பெரிய அளாக வேண்டும் என்று நினைத்தான்.

தன் மனைவி வள்ளிக்கு முரட்டு கணவன்; காதலனாக தன் மனைவி மனதில் நிலைநின்றவன். வள்ளியை வேலைக்கு அனுப்பாமல் ராணிபோல் பார்த்துக் கொண்டான்.

வள்ளியை சாதாரண பெண்ணாகத் தவறாக எண்ணினான். அவளை அடக்கிஆள முற்பட்டான். தன்னுடைய தொழில் விசயங்களைப் பற்றி விவாதிக்கக்கூடிய அளவுக்கு தகுதி உடையவள் அல்ல என எண்ணினான்.

சுடலை தன் மனைவி வள்ளியைத் தனிமைப்படுத்தினான். கடவுளை பற்றி போதித்த அவன், உறவுகள் குறித்து கூறத் தவறினான்.

வள்ளி கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறாமல் அவன் அவள் கேள்விகளை கேள்வி கேட்டான். காலப்போக்கில் வள்ளியின் வார்த்தைகளையும் அவற்றின் முக்கியதுவத்தையும் புரிந்து கொண்டான்.

தனக்கு குழந்தை பிறந்தபோது தனக்கு நடக்காத அனைத்தையும் தன் குழந்தைக்கு வைத்து மகிழ்ச்சி அடைந்தான். தன் மகனிற்கு மோகன் என்று பெயரும், பேபி என்று செல்லப்பெயரும் வைத்து, எஜமானர்களிடம் சொன்னால் கேலி செய்வார்கள் என தெரிந்தும் அவர்களிடம் சொல்லி கர்வப்பட்டவன்.

சுடலை காலத்திற்கு கட்டுபட்டவன். ஆரம்பத்தில் அவனது குறிக்கோள் தனது சந்ததியை மாற்றி விடும் என்று நினைத்தான். ஆனால் அது அவனை மட்டும் சார்ந்ததல்ல என்று தெரிந்தபின் அதை எதிர்க்காமல் ஏற்றுக் கொண்டான். என்னதான் தன்னுடைய இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு போனாலும் தன்னுடைய சகாக்களுக்கு துன்பம் அளித்து இருந்தாலும் அது தவறு என்று ஒரு கட்டத்தில் யோசித்து பார்த்தான்.

சுடலை தன் தந்தை மீது அதிக பாசம் கொண்டவன். தந்தையை சரியாக அனுப்பி வைக்கவில்லை என்பதை நினைத்து வருத்தப்பட்டவன். தனது தந்தையை முன் உதாரணமாக எடுத்துக்கொண்டு தன் மகனுக்காகவே வாழ்ந்து காட்டினான்.

**வள்ளி**

வள்ளி என்பவள் சாதாரண தோட்டிச்சி.

வள்ளி சிறுவயதிலேயே தாய் தந்தையை இழந்தவள். தனது ஒரே பற்றுகோலான அத்தையிடம் வளர்ந்தவள். தன் பெற்றோரை இழந்த போதிலும் உறவுகளின் முக்கியத்துவம் அறிந்தவள்.

தன்னை வளர்க்கும் அத்தை மீது அதிக பாசம் கொண்டவள். அத்தை ஆலப்புழை நகரில் குப்பை கூட்டுபவளாகவும், சில சமயங்களில் தோட்டியகாவும் வேலை செய்பவள். வள்ளியும் எப்போதாவது அத்தைக்கு உதவியாக வேலை செய்பவள்.

வள்ளி சுடலையுடன் திருமணம் முடிந்த மறுநாள் அவள் தன் கணவனுடன் தோட்டிகள் சேரியில் ஒரு பழைய குடிசை செப்பனிடப்பட்டு அதில் தன் வாழ்க்கை வாழத் தொடங்கினாள்.

சுடலைமுத்து தனது எதிர்காலத் திட்டங்களை எல்லாம் வள்ளியிடம் கூறினான். மகத்தான பல திட்டங்களை அவன்நிறைவேற்ற எண்ணினான். படிப்படியாக அவன் வளர்வதற்கான வழிகள் அந்தத் திட்டத்தில் அடங்கியிருந்தன.

வள்ளி திருமணம் முடிந்து 'ஹனிமூன்' சென்ற அந்த பத்து நாட்களிலும் என்னென்னெவல்லாமோ அனுபவித்துவிட்டாள் புதுமையான ஒரு உலகத்தையே அவள் கண்ணாரக் கண்டாள். தன் அனுபவங்களையெல்லாம் தன் தோழிகளிடம் சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டவள் பின் தன் கணவன் யாருடனும் இனி எந்தவித தொடர்பும் வைத்துகொள்ள கூடாது என்று உத்தரவிட்டிருந்ததால் சொல்லாமல் இருந்தாள்.

திருமணத்திற்கு பின்பு கணவனின் கனவுகளுக்கு கட்டுபட்டு தன் ஆசாபாசங்களை அடக்கி வைத்துக்கொண்டவள்.

தன் கணவனின் கனவுகள் பற்றி முழுமையாக புரிந்துகொள்ள முடியாதவள். அப்போதும்கூட கணவனுக்கு உறுதுணையாக இருப்பவள். ஆனால் கணவன் செய்யும் அனைத்து செயல்களையும் கண்மூடித்தனமாக நம்புபவளும் ஏற்பவளும் அல்ல.

திருமணமாகி சில நாட்கள் கடந்திருந்த நிலையில் வள்ளி கணவனின் திட்டங்களில் சந்தேகப்பட்டாள். வள்ளி 'அவன் வீடும் நிலமும் வாங்கப்போவதில்லை. அந்த வீடு ஓட்டு வீடாகவும், பின்னர் மாளிகையாகவும் ஆகப் போவதில்லை. தோட்டி பெரிய மனிதனாக மாற முடியாது. அவனுடய குழந்தைகள் எப்படிப் பெரியவர்கள் ஆக முடியும்? அவர்கள் எழுதவும் படிக்கவும் தெரிந்து கொள்ள முடியுமா? எப்படியும் தோட்டியின் குழந்தைகள் தோட்டிக் குழந்தைகள்தாமே. தோட்டிகளுடன் தானே கூடிக் கலந்து வாழ முடியும்' என்று தோட்டியின் வாழ்க்கை குறித்து தன் மனதினுள் நினைத்துக் கொண்டவள்.

தன் கணவனுக்கு சரியான மனைவி அல்ல என்ற தாழ்வு மனப்பான்மை கொண்டவள். ஒருமுறை தன் கணவரிடமே நேராக சென்று 'வேறு ஒரு தகுதி உடைய பெண்ணை திருமணம் செய்து இருந்தால் சந்தோசமாக இருந்திருப்பீர்களா?' என்று கேட்டவள்.

தன் மகனை கண்போன்று பார்த்துக் கொண்டவள். தன் கணவன் மகனிடம் அன்பு செலுத்த மாட்டேன் என்று கூறியபோதும் அவளே தாயாகவும் தந்தையாகவும் பார்த்து கொண்டவள்.

வள்ளி, தன் குழந்தை 'அப்பா' என அழைத்த போதும் கண்டிடாத சுடலையைப் பார்த்து கோபப்பட்டாலும் அவனைப் பற்றி புரிந்து கொள்ளத் தவறவில்லை. தன் மகன் தந்தையைப் பற்றி கேட்கும் கேள்விகளுக்கு தன்னால் முடிந்த அளவிற்கு சமாளித்தாள். அவளின் பதில்கள் அனைத்தும் கணவனையும் மகனையும் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும் என எண்ணினாள்.

சுந்தரத்தின் மனைவியை மருத்துவமனைக்கு அனுப்ப சுடலை ஆவேசமாக இருந்தபோது அவனை எதிர்த்தாள். சுடலை செய்வது மற்றோருக்கு நியாயமான, குறிப்பாக தனக்கு நலமான செயல் எனினும் அது பாவச்செயல் என வள்ளி உணர்ந்திருந்தாள். மருத்துவமனையில் சென்று இறப்பது வள்ளிக்கும் மற்றோருக்கும் சரியெனப்படவில்லை. அதை வெளிபடுத்தவும் அவள் தயங்கவில்லை.

கணவரது தவறுகளை சுட்டிக்காட்டினாள். ஆனால் அவனுக்கு சிலவற்றை புரிந்துகொள்ளும் இயல்பில்லை எனத் தெரிந்தும் ஏற்றுக்கொள்பவள். சண்டையிட பல காரணங்கள் இருந்த போதும் சமாதனத்தையே வளர்த்தாள். தன் அத்தையை பார்க்கவும் அனுமதிக்காத பார்க்க வந்தாலும் மதிக்காத கணவனை எண்ணி மனம் கசந்தாளேயன்றி சண்டையிடவில்லை. தன் மகப்பேறுவுக்குப் பின் காண வந்த தோழிகளைகூட கேள்வி கேட்ட கணவனிடம் பொறுமையாக நின்றவள். பொறுமையால் வென்றவள்.

**மோகன்:**

தான் ஒரு தோட்டியின் மகன் என்று தெரியாமல் வளர்க்கப்பட்டான் மோகன். 'தோட்டி' என்ற இனமுத்திரை இருந்தால் ஒரு சாதாரண குழந்தை போல் பள்ளிக்கு செல்ல முடியாது; பள்ளி செல்லாவிடில் அறிவு வளராது; அறிவு இல்லையெனில் பிழைக்க இயலாது வளர்ந்தான்.

மோகன் தன் தந்தை கொண்ட பெருங்கனவுகள் எதுவுமே தெரியாமல் தானும் பள்ளி செல்லும் சாதாரண ஒரு சிறுவன் என்றே எண்ணி வளர்ந்தான். அவனுக்கென இளம் வயதிலேயே பெரிய ஆசைகள், கனவுகள் எதுவுமே கிடையாது. ஒன்றைத்தவிர, சாதாரணமாக சமுதாயத்தில் வாழும் ஒரு குழந்தை போல்

வளர்ந்ததாலோ என்னவோ தம் வயதினர் போல தந்தையுடன் உறவாடி மகிழ வேண்டும் என ஏங்கினான்.

தந்தை கையால் உணவு உண்ண வேண்டும்; அவருடன் மாலைபொழுதைக் கழிக்க வேண்டும் எனத் தொடங்கி அவர் வேண்டும் தன்னுடன் என ஒரு சாதாரண குழந்தை கொள்ளும் பாச நேசங்கள் அவனுக்குள் ஆணிவேர் கொண்டு ஆழப்பதிந்திருந்தன. தந்தையுடைய இலட்சியம் தெரியாதவனாக அவரை தொலைவில் மட்டும் பார்த்து ரசித்தான்.

மோகனுக்கு நண்பர்கள் இல்லை. அவன் வீட்டின் பக்கத்திலெல்லாம் முதலாளிகளின் பங்களாக்கள்தாம் இருந்தன. அதற்கு அப்புறம் ஏழைகள் வாழும் குடிசைகள். அங்கே குழந்தைகள் இருக்கிறார்கள். ஆனால் தோட்டியின் மகனான மோகன் அந்தக் குழந்தைகளுடன் விளையாடியதில்லை.

தன் மகனை பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று எண்ணியிருந்தான் சுடலை. ஒரு நிஜாரும் சட்டையும் அணிவித்து அலங்காரம் செய்து கூட்டிக்கொண்டு போன மோகனை தலைமை ஆசிரியருக்கு பிடித்து போய்விட்டது. ஆனால், சொல்வதற்கு மட்டும் ஒரு நொண்டிசாக்கு இருந்தது.

தோட்டி, தன் குழந்தையை பள்ளியில் படிக்க வைத்தான் என்பது இதுவரை நடந்திராத விஷயம். தலைமை ஆசிரியருக்கு லஞ்சம் கொடுத்தால் என்ன என்று எண்ணிய சுடலை, ‘குழந்தையின் பெற்றோர்’ என்ற இடத்தில் வேறுயாராவதுடைய பெயர் போட வேண்டும் என்றும், மாதம் இரண்டு ரூபாய் தலைமை ஆசிரியருக்கு கொடுக்க வேண்டும் என்றும் இந்த இரு நிபந்தனைக்கு உட்பட்டு பள்ளியில் சேர்த்து இருந்தான். அந்த நாள் சுடலைக்கும் வள்ளிக்கும் விசேஷமான நாளாக அமைந்தது.

மோகன் சொல்லிக் கொடுப்பனவற்றை உடனே உள்வாங்கிக் கொள்ளும் மாணவன். கற்பூரபுத்தி உடையார் என்பார்களே அதுபோல.

மோகன் தன் அம்மாவிடம் வந்து தான் கற்றுக்கொண்டு வந்தவற்றை அவனுக்கும் கற்றுக் கொடுப்பவன். அம்மாவுக்கும் பாடம் எடுப்பவன். அம்மாவைத் தவிர அவனுக்கு பேச்சு துணைக்கு நண்பர்கள் இல்லை. அவனைப் பொறுத்தவரை பள்ளியிலும் சரி சுற்றத்திலும் சரி ஒரு நண்பனைத் தேடி உறவாடலாம் என்றாலோ ‘அம்மா திட்டுவா’ என்ற பயம். மற்ற குழந்தைகள் ஓடி, ஆடி, கூச்சலிட்டு, சண்டை போடுவதேல்லாம் அவனுக்கு ஆசையை மூட்டும் விசயங்கள். எனினும் அவனிடம் ஆசைகளோடு ஆசையாய் அவையும் இருந்தன.

மோகனுக்கு நண்பனென்று கிடைத்தால் அது தோட்டிகளாகத்தான் இருக்கும். இவன் வயது சிறுவர்களாகத்தான் இருக்க முடியும். இதை அறிந்தவள் வள்ளி. என்னதான் ஊரே மெய்ச்சும்படி குழந்தையை அவள் பள்ளிக்கு அனுப்பினாலும், வகுப்பறையில் பிறர்க்கு அவன் உதாரணமாக இருந்தாலும் சகமாணவர்கள் அனைவரும் மோகன் ஒரு தோட்டியின் மகன் எனத் தெரிந்ததும் அவனிடம் யாரும் பழகவில்லை. மோகனுக்கு வேண்டியவன் ஒரு நண்பன். ஒருவன் வந்தான். அவன் பிச்சாண்டியின் மகனே. தாய் தந்தையற்று ஊர் ஊராக சுற்றித் திரியும் அவன், மோகன் கண்களுக்கு தன்னைவிட உயர்ந்தவனாகத் தென்பட்டான். அவர்களின் நட்பு வளர்ந்தது.

ஒருநாள் வள்ளி அதனை தெரிந்து கொண்டாள். இப்படிப்பட்ட பையன்களுடன் சிநேகம் வைத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்லி அவனை விலக்கினாள். இருந்தாலும் மோகனுக்கு அந்த பந்தம் அறுக்க முடியாத ஒன்றாகி போனது. தாய்க்கு தெரியாமல் அந்தப் பையனுடன் பார்த்து பேச தொடங்கலானான். மோகனைப் பொறுத்தவரை அந்தப் பொறுக்கி பையன் ஒரு அற்புதப் பொருளாகிவிட்டான்.

மோகன் அந்தப் பொறுக்கிபையனிடம் இருந்து சில விஷயங்களை தெரிந்து வைத்திருந்தான். நாள் தவறாமல் மோகனின் தந்தையை முல்லைக்கல்லில் பார்ப்பதுண்டு என்றும் அவன் ஒரு தோட்டி என்ற விஷயத்தையும் மோகனிடம் அப்பையன் தெரிவித்திருந்தான்.

மோகன் தன் தாய் வள்ளியிடம், 'தோட்டினா என்னம்மா?' என்ற கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் வாயடைத்துப்போன வள்ளி அவனிடம் 'வேண்டாத கேள்வியெல்லாம் கேட்க கூடாது' என்று கோபப்பட்டாள். அவனை அடிப்பதாகப் பயமுறுத்திய வள்ளியைப் பார்த்து பயந்து போனான் மோகன்.

மோகன் தன் பெற்றோருக்கு தெரியாமல் தன் நண்பனுடன் நெருங்கி பழகினான். எத்தகைய குழந்தைகளுடன் சேரக்கூடாது எனப் பெற்றோர் நினைத்தார்களோ அவர்களுடனே சேர்க்கப்பட்டான். ஒரு நாள் முழுதும் பெற்றோர் நினைவின்றி அந்தப்பையனுடன் திருவிழாவில் மூழ்கிப் போனான். வள்ளி சேரக்கூடாது என்று சொன்னதை மீறிப் பழகியதாலோ என்னவோ, அவளைக் கடைசியாக உயிருடன் பார்க்க இயலவில்லை மோகனால்.

சாலையில் துர்நாற்றத்துடன் ஒருவர் ஒரு பீப்பாயை உருட்டிச் சென்றபோது மூக்கை மூடிய மோகன், தன் தந்தையும் அவ்வேலைதான் செய்கிறார் எனத் தெரிந்தபின் துளியும் அருவெறுப்பின்றி, உண்மையைப் புரிந்து கொள்ளும் பக்குவத்தை சிறுவயதிலேயே பெற்ற மோகன், தன் தந்தையையும் உடல் மறைக்கப்பட்டு காலும் தலையும் மட்டும் தெரிந்த நிலையில், சுடுகாட்டுக் காவலாளியாக

இருந்தே நோய் தொற்றி இறந்த, புதைக்கப்படும் சில நிமிடங்களுக்கு முன்புதான் பார்த்தான். மகனுக்கு படிப்பு, வசதி செய்து தந்த பாசம் காட்டத் தவறிய சுடலைக்கோ மகன் வீசும் மண் கூட கிட்டவில்லை.

சிறப்பாகத் தொடங்கிய மோகனின் வாழ்வு அவ்வாறே முடியவில்லை. தாய், தந்தையின்றி நண்பர்களுடனே சாலைகளிலும் சகதிகளிலும் வளர்ந்தான். வாழ்க்கைப் பாடங்கள் பல கற்றான். தோட்டியானான். ஆனால் அவன் ஓரிரண்டு வார்த்தைகள் படித்தவன். தந்தைபோலவே, தோட்டிகள் புறக்கணிக்கப்படுகின்றனர், அவர்கள் ஏமாற்றப்படுகின்றனர் என உணர்ந்தான். காலப்போக்கில் தோட்டிகளுக்கும் உரிமை வேண்டுமென போராடினான். தந்தையைப் போன்ற எண்ணம் இருந்தது எனினும் தந்தையிடம் இல்லாத நண்பர்கள் பலவும் அதனால் செறிந்த வீரமும் விவேகமும் மோகனிடம் இருந்தது. அவன் ஒரு தலைவனாக இருந்தான். போரட்டத்தின் பங்குகொண்டு, தலைவனாகவே வீரனாகவும் இறந்தான்.

**ஓவர்சீயர் கேசவபிள்ளை**

கதையில் பெரிய அளவு கதாபாத்திரமாக வராவிடினும் கதையின் திருப்பங்களில் பெரும்பங்கு உடையவர்.

தோட்டிகள் சிந்திக்கத் தொடங்குவது அவர்களுடைய மேலதிகாரிகளுக்கு நல்லதன்று. அதுவும் ஏறத்தாழ அடிமை வர்க்கத்திடமிருந்து முதலாளிகள் எதிர்பார்க்கும் விவரமே. ஓவர்சீயர் அதை அறிந்தவர்.

தோட்டிகளுக்கு மத்தியில் பயத்தை ஏற்படுத்தும் பாத்திரம் இவருடையது. தோட்டிகள் சேரியில் ஓர் சிறு மாற்றம் கூட இவரின் பார்வையை விட்டு விலகாது. கராரான மனிதர், எனினும் தோட்டிகள் முதன் முதலாக சங்கம் தொடங்கிய போது நேரடியாக எதுவும் செய்ய முடியவில்லை. சங்கத்தின் வேரையே பிடுங்க எண்ணிய இவர் சுடலையைப் பயன்படுத்திக் கொண்டார். படிப்படியாக பொருளாதார ரீதியாக உயர்ந்ததை அறிந்துகொண்டு அவன் பணத்தை நகரசபைத் தலைவர் எனும் முதலை வாயில் போடச் செய்தவன். அது திரும்பவராது என சுடலையைத் தவிர அனைவருக்கும் தெரிந்து இருந்தது.

சுடலையைப் பயன்படுத்தியே அவன் செல்வாக்கை குலைத்தார் ஓவர்சீயர். சுடலை தனியாக வீடு, குடும்பம் என வாழ விரும்பினான். அதை சுடலையைப் பிரித்து, நடைமுறைப்படுத்தியதில் ஓவர்சீயருக்கு பெரும் பங்குண்டு.

ஓவர்சீயர் இவர்களை கீழ்தர அடிமைகளாக நடத்துவதும், மதிக்காமல் உதாசீன படுத்துவதும் வாடிக்கையாக வைத்து வந்துள்ளார். இவர்களது சந்ததியும் இதே வேலையில் ஈடுபடுகிறது.

ஒழுங்காக சம்பளமும் தோட்டிகளுக்கு கிடையாது. ஓவர்சீயர் சம்பளத்தில் பாதியை பிடுங்கிவிடுவார்.

ஓவர்சீயர் சுடலையை வைத்து பெயருக்கு ஒரு சங்கம் அமைத்தார். தானே அதன் தலைவரானார். தோட்டிகளை சுரண்டுவதற்கு ஒரு சங்கம் ஊரறிய சுடலையின் உதவியால் தொடங்கப்பட்டது.

தோட்டிகள் பேரில் ஓவர்சீயருக்கு எவ்வித நல்லுணர்வும் இல்லை. இப்பகுதியில் திடீரென ஏற்பட்ட வைசூரி காய்ச்சலுக்கும், காலரா நோய்க்கும் கொத்து கொத்தாக இந்த நகரசுத்தி தொழிலாளர்கள் மாண்டுபோயினர். வைசூரியால் பாதிக்கப்பட்டு தோட்டிகளின் தொகை குறைந்தபோது எந்த நடவடிக்கையும் இவர் எடுக்கவில்லை. இவர்கள் இவ்வாறு இறக்க இறக்க புதிது புதிதாக தொழிலாளர்கள் திருநெல்வேலியிலிருந்து வரப்பட்டனர். என்ன ஆனாலும் அவருக்கு வேலையாக வேண்டும். நகராட்சி கட்டுப்பாட்டில் இருக்கும் இவர்களை மேற்பார்வையிட்டு வந்தார் ஓவர்சீயர் கேசவப்பிள்ளை. அவர்களும் இறந்தால் அவருக்கு ஆள் அழைத்து வர வேறு ஆட்கள் வெளியூரில் இல்லாமலா போகும்?

**பிச்சாண்டி**

இந்நாவலில் முக்கிய துணைப்பாத்திரம் பிச்சாண்டி.

தனது ஒரே துணையான தந்தையை இழந்த சுடலைக்கு அண்ணனாக இருந்தவன் பிச்சாண்டி.

சுடலையிடம் இருந்து எதையுமே எதிர்பாராத, சுடலை போன்றே தோட்டிகள் அவர்கள் உரிமைகள் பற்றி கவலைப்பட்டவர். ஆனால் இவர் சுடலை போல் இடையில் மாறிவிடவில்லை.

சுடலைக்கு அடுத்தபடியாக பிச்சாண்டி. சுடலை ஓவர்சீயர் கைப்பொம்மையான பின் தன் மக்களின் பிரதிநிதியானான் பிச்சாண்டி.

சுடலை பழகிய பழக்கத்தை மறந்து எறிந்து விழுந்த போதும் பொறுமையை இழக்காதவன் பிச்சாண்டி. ஆனால் சுடலையையும் ஓவர்சீயரையும் குறைவாக எடைபோட்டு விட்டான் பிச்சாண்டி. அதற்கு விலை தன் குடும்பம் ஆனது.

ஓவர்சீயரின் விளையாட்டாலும் சுடலை விளையாடிய விதத்தினாலும் பிச்சாண்டியின் குடும்பம் சீர்குலைந்தது. குடும்பத்தை விட்டு பதினைந்து நாள் வெளியூர் சென்ற பிச்சாண்டி

திரும்பவேயில்லை. பிச்சாண்டி தன் அறியாமையாலேயே அழிந்தான் என்று சொன்னால் மிகையாகாது.

**இசக்கிமுத்து**

ஒரு நல்ல தோட்டி என்பதைவிடவும் ஒரு சிறந்த தந்தை.

எவ்வேலையானாலும் தன் வேலை மகனை சென்றடைய வேண்டும் என்று மிகவும் உறுதியாக இருந்தார். மகன் முதல்நாள் தவறவிட்ட வாய்ப்பை மறுநாளே சென்று தக்க வைத்தார்.

இசக்கிமுத்து எசமானர்களிடம் உண்மையான மரியாதை, விசுவாசம் உடையவர். முப்பது வருடமாக அவர்களுடைய வீட்டை மணம் மாறாமல் வைத்துக் கொண்டவர் என்று தன்னை நினைத்துக் கொண்டதாலோ என்னவோ தான் போகாவிடில் அவர்கள் நிலைமை என்ன என்று எண்ணியதாலோ ஆறு நாட்கள் மட்டுமே விடுப்பு எடுத்துள்ளார்.

ஆனாலும் இசக்கிமுத்து தன் மகனின் கனவுகள் தெரியாதவராகவே வாழ்ந்துள்ளார் எனத் தெரிகிறது.

இசக்கிமுத்து மகனை முதன்முதலாக வேலைக்கு அனுப்பும் போது அந்த வேலை அவனுக்கு என்றும் இருக்கனும் எனப் பிராத்திக்கிறார். மகனை நெகிழ்ச்சியுடன் பணிக்கு அனுப்புகிறார். இவற்றிலிருந்து மேற்குறிப்பிட்ட கூற்று தீர்க்கமாகிறது.

**'தோட்டியின் மகன்' நாவலில் சமுதாயநிலை:**

இது சமூகத்தில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்திய நாவல்.

சமுதாயத்தில் சாதாரணமாக நடத்தப்படும் அநீதிகளை ஆணித்தரமாக புரியவைக்கும் நாவலாக 'தோட்டியின் மகன்' உள்ளது. தோட்டிகள் எவ்வாறெல்லாம் ஏமாற்றப்படுகின்றனர், எவ்வாறெல்லாம் அசிங்கப்படுத்தப்படுகின்றனர் எனத் தெளிவாக எடுத்து இயம்புகிறது.

**"பணக்காரன், வயிறு தெரியாம திம்பான்.**

**சீரணமாவாது.**

**ஏழைகள் கண்டதையும், கெடச்சதையும்**

**திம்பானுங்க.**

**அவங்களுக்கும் சீரணமாவாது."**

இது நாவலின் நெற்றியடி வசனமாகும். மலக்கிடங்கில் தோட்டிகளின் இடையில் நடக்கும் விவாதத்தில் வரும் வசனமாகும். எவ்வளவு பொருள் பொதிந்த உண்மையாக இருக்கிறது.

பிச்சைக்காரன் பிச்சைபெற செல்லும்போது அவனது கூப்பாட்டை விடவும் அவனது தோற்றம் முக்கியமானதாகிறது. பாத்திரமறிந்து பிச்சை போடவே பெரும்பாலானோர் எண்ணுகின்றனர். நாற்றத்துடன் வேலை செய்யும் ஒருவனுடைய தோற்றம் மாறவோ அவர்களுடைய நிலையில் முன்னேற்றம் காண்பதோ அவர்களுடைய எசமானர்கள் எண்ணுவதில்லை. சமுதாயத்தை குறை கூறுவதற்கு போதுமான சான்றுகளில்லை. எனினும் எசமானர்கள், பணியாளர்கள் சமுதாயத்தை சார்ந்தவர்களாகத்தான் காணப்படுகின்றனர். அதோடு சமுதாயத்தில் உடன்பயிலும் ஒரு மாணவனாகவோ மாணவியாகவோ உடன் பணியாற்றும் ஒரு சகப்பணியாளராகவோ உறவாடும் ஏதேனுமொரு உறவாகவோ ஏன் சிறிது நேரமே உடன்வரும் வழித் துணையாகவோ ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டப்படுகின்றது என்பதை இந்நாவல் புலப்படுத்துகிறது.

**தோட்டிகளின் அவல நிலை:**

கதையில் நோய் தாக்கப்பட்டு இறந்து போகும் பிச்சைக்காரனுக்கோ தோட்டிக்கோ இறப்பு சான்றிதழ் வாங்குவது கடினம்; அம்மக்கள் மக்கள்தொகை கணக்கெடுப்பில் கூட இருப்பதில்லை என ஆசிரியர் கூறுகிறார். எவ்வளவு ஆழமான பார்வை. ஒரு தோட்டி, தான் செய்யும் தோட்டி வேலையில் சிறந்தவனாகவே வாழ்ந்து இருந்தாலும் அவனது வரலாற்றை பேசப் போவது யார்? அவன் இறப்பே பதிவுசெய்யப்படாத போது, அவன் இருந்ததையும் அவன் சாதனைகளையும் எங்கு எழுதி வைப்பது? என பற்பல கேள்விகள் தோன்றுகின்றன.

ஒருவேளை இவ்வளவு பாதிப்புகள் தரும் தொழில் இல்லாமல் போனால் என்ன? தோட்டிகள் அனைவரையும் வேறு வேலையில் அமர்த்தி பழைய தொழிலின் வாடை கூட வராமல் சமுதாயத்தில் உலவவிட்டால் என்ன? அவர்களும் மனிதர்கள் தானே; உணர்வு உடையோர் தானே! அசிங்கத்தை பார்த்தால் நமக்கும் அவர்களுக்கும் சுரக்கும் ஹார்மோன்களும் அதனால் வெளிப்படும் உணர்வுகளும் ஒரே மாதிரியாக தானே உள்ளன! நம் அசிங்கத்தை வேறொருவர் அள்ளுவதற்கு நாமென்ன குழந்தைகளா? அவர்கள்தாம் தாய்மனம் கொண்டவர்களா? பணியாகவே இருப்பினும் அவர்கள் சம்பளமே பெறினும் அவர்கள் விலங்குபோல் அல்லவா நடத்தப்படுகின்றனர். ஒருவேளை காந்தியடிகள் போல அவரவர் வீட்டு கக்கூசுகளை அவரவரே கழுவினாலும் மத்திய அமைச்சர் கூறியது போல நம் குப்பைகளை நாமே பொறுக்கி, பிரித்து அப்புறப்படுத்தினால் என்ன? என்னும் உணர்வுகள் சிந்தனைகளாகக் காணப்படுகின்றன.

நம் நாட்டின் பின்தங்கிய பொருளாதாரத்தினாலும், மக்கள்தொகை பெருக்கத்தினாலும், படித்த பல்வேறு பட்டதாரி இளைஞர்கள் வேலையின்றி இருப்பதாலும் இம்மாதிரியான சம்பவங்கள் நடைபெறுகிறது.

வெளிநாடுகளைப் போல எந்திரமயமாதலும் சிந்திக்க வைக்கும் ஒன்றாகவே காணப்படுகிறது. வெளிநாடுகளில் நவீன கழிப்பறைகள், குப்பைத் தொட்டிகள் இருப்பினும் முழுதும் தோட்டிகளை ஈடுபடுத்தாத நாடு இல்லை. அவ்வாறு பயன்படுத்த வாயப்பளிக்காத தொழில்நுட்பமும் இல்லை. எனவே, தொழிலை பாதிக்காமல் தொழிலாளர்களைப் பாதுகாப்பதே சிறந்தது என்று தோன்றுகிறது.

**இன்றைய சூழலில் துப்புரவுப் பணியாளர்களின் நிலை:**

நாவல் எழுதப்பட்ட காலக்கட்டத்திற்கு பின் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அதில் பல தோட்டிகள் முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பதற்கு உதாரணங்களும் கூறப்படுகின்றது.

2018 நீட் தேர்வில் வெற்றி பெற்ற சுதாகர்(நெல்லை மாவட்டம்) ஒரு துப்புரவு தொழிலாளியான பாஸ்கரின் மகன் என்பது தமிழகத்தின் சிறந்த சம்பவம். குடும்பத்தின் முயற்சியும் மாணவனின் பயிற்சியும் அதற்கான அங்கீகாரமும் மெய்சிலிர்க்க வைக்கும் செய்திகளாக உள்ளது.

தொட்டியாகத் தகுதி தேவையில்லை; குடும்ப பாரம்பரியத்தில் அத்தொழில் இருந்தாலோ குடும்பம் அற்று இருந்தாலோ தொட்டியாகலாம் என்ற எண்ணம் காணப்படுகின்ற சூழலில் நன்கு ஆரம்பகல்வி பெற்ற மோகனுடைய வாழ்க்கையும் அவ்வேலையையே சுற்றி வந்தது. எனவே ‘தோட்டி’ என்னும் தொழிலுக்கு தகுதி ஒரு தடையில்லை என்று நமக்கு தெளிவாகிறது.

இது தற்போது சாத்தியமே. அரசாங்கம் துப்புரவு பணியாளர்களைத் தேர்வு செய்கிறது. தகுதிகள், வரையறைகள், விடுமுறைகள், ஓய்வூதியங்கள் எனப் பலவற்றை உள்ளடக்கிய அரசாங்கப் பணியாக உள்ளது. சமீபத்தில் துப்புரவு பணியாளர் விருப்பத்திற்கு பொறியியல் படித்த ஒரு பெண்மணி விண்ணப்பித்திருந்த செய்தி பெரும்பாலானோரை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. இது ஒரு பரபரப்பான செய்தியானது.

அதேபோல் துப்புரவு பணியாளர்கள் வாழ்நாள் முழுவதும் அவ்வாறே இருப்பர் என்ற கூற்றையும் தகர்க்கும் வகையில் விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிப்புதூர் தாலுகாவின் கான்சாபுரம் ஊராட்சி மன்றத் தேர்தலில் பஞ்சாயத்து தலைவராக வெற்றி பெற்றுள்ளார். அதே பஞ்சாயத்தில் துப்புரவு பணியாளராக முயற்சியும் அப்பகுதி

மக்கள் சரஸ்வதி அவர்களின் முயற்சியும் அப்பகுதி மக்கள் சரஸ்வதி மீது கொண்டுள்ள நம்பிக்கையும் அனைவரும் அறிய வேண்டிய செய்தி.

கதையில் ‘வைசூரி’ ‘காலரா’ என்னும் கொடிய நோய் காணப்படுகிறது. துப்புரவு பணியாளர் பகுதிகளில் நோய்கள் எளிதாக பரவுகின்றன. குறிப்பாக தூய்மையற்ற குடிநீர், உணவு முதலியவற்றால் பரவும் நோய்களைத் தடுப்பது மிகவும் கடினமே. கதையில் பல முக்கிய பாத்திரங்களை எளிதில் விழுங்கி விட்டவை நோய்களே. சமீபத்தில் 2022க்குள் துப்புரவு பணியாளர்களுக்கு வீடு வழங்க தேசிய துப்புரவாளர்கள் மறுவாழ்வு ஆணையம் திட்டமிட்டுள்ளது. மறுவாழ்வுத்திட்டம் (டிசம்பர்11,2018) அதன் பின்பு, மாதம் ஒருமுறை மருத்துவ முகாம் நடத்தி முழு உடல் பரிசோதனை செய்யவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதாள சாக்கடையில் விஷவாயு தாக்கி இறக்க வாய்ப்புகள் அதிகம், இறப்புகள் நிகழ்ந்தும் உள்ளன. இதை தடுக்க ரோபோக்கள் பயன்படுத்தி சுத்தம் செய்ய வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளது. இவை நம்பிக்கையை வளர்க்கின்றன. எனினும், துப்புரவு பணியாளர்களுடைய வாழ்க்கைமுறை மாற்றமே இவையனைத்தும். அவர்களின் பணி மாறாது. எம்முயற்சி எடுத்தாலும் அசுத்தம் சார்ந்த சில நோய்கள் நிச்சயம் அவர்களைத் தாக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கதே.

பணிகேற்ற ஊதியம் இல்லை, துப்புரவு பணியாளர்கள் சுரண்டப்படுகிறார்கள் முதலிய காரணங்களால் தான் சங்கம் அமைய வேண்டும் என நாவல் கூறுகின்றது. தற்போது அது நடைமுறையில் உள்ளது. தற்போதைய வழக்கப்படி பணியாளர்களின் வருமானம் மாதம் 5ஆம் தேதி அவர்கள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இதோடு பணியாளர்களின் குழந்தைகள், அவர்களை சார்ந்தோர் சுயதொழில் தொடங்க அரசு கடனுதவிகளும் வழங்குகின்றது. மத்திய அரசு 25,000 முதல் 25,00,000 வரை தொழில்கடன் வழங்குகிறது. இத்தகைய செய்திகள் நம்பிகையை வளர்க்கின்றன.

**முடிவுரை:**

அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதே சமுதாயம் ஆகும்.

அந்த சமுதாயத்தில் பல்வேறுபட்ட பண்புள்ள மனிதர்களும், குடும்பங்களும் மாறுபட்ட கருத்து முரண்பாடுகளும் காணப்படுவதை அறிய முடிகிறது.

அதுபோன்று தான் ‘தோட்டியின் மகன்’ என்னும் இம்மொழிபெயர்ப்பு நாவலில் சுடலை தோட்டி சமுதாயத்தை

சார்ந்தவனாயினும் தான் தோட்டியாக வாழ்வதை விரும்பாதவனாக இருக்கின்றான் என்பதனை அறிய முடிகிறது.

மேலும், தனது மகன் மோகன் தோட்டி என்னும் இழிவான இந்த சமுதாயத்தில் வாழ்ந்து வரக் கூடாது என்ற சுடலையின் அவிப்பிராயத்தையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் மோகனை தனது சமுதாயத்தை பிற சமுதாயத்தின் முன்னேற்றங்களுக்கு இணையாக கொண்டு வரவும், தாழ்வு மனப்பான்மையினை நீக்கும் ஒரு முன்னேற்ற சமுதாயத்தின் தலைவனாகவும் நம்மால் பார்க்க முடிகின்றது.

இன்றைய காலகட்டத்தில் தோட்டி சமுதாயம் பிற சமுதாயத்திற்கு உரிய அனைத்து உரிமைகளையும் பெற்றுள்ளனர் என்பது இந்த 'தோட்டியின் மகன்' எனும் மொழிபெயர்ப்பு நாவலின் வழி உணர முடிகிறது.

**அடிக்குறிப்பு:**

1.பாரதியாரின் தேசிய கீதங்கள்-தமிழ் மொழி

2.திருவள்ளுவர்-திருக்குறள், குறள் 1062

3.பாரதியாரின் பல்வகை பாடல்கள்-முரசு

4.தகழி சிவசங்கரப் பிள்ளை-தோட்டியின் மகன்